8

**தமிழ் நாடு அரசு**

கடித எண்.33225/எஸ்/2004-2
பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (எஸ்) துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

நாள் 23.6.2004

அனுப்புநர்

திரு.ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து செயலகத் துறைகள்

---

அனைத்து துறைத் தலைவர்கள் (மாவட்ட ஆட்சியர்கள் உட்பட)

ஐயா,

பொருள்: பிறந்த தேதி மாற்றம் – மனுதாரர் மனு மற்றும் இதர ஆவணங்களை சமர்பித்தல் – மனுதாரரின் கோரிக்கை ஏற்பளித்தல் – பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளல் – அறிவுரைகள் – வழங்கப்படுகின்றன.

பார்வை: சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ந.க.வ.நி.3(3)/86921/02 நாள் 13.2.2004.

- - - - -

தமிழ் நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதிகளின் விதி 49-இல் அரசு ஊழியர்களின் பிறந்த தேதி மாற்றம் செய்வது குறித்து நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி அரசு ஊழியர்கள் பிறந்த தேதி மாற்றம் செய்வது தொடர்பான மனுக்களை சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவை வருவாய் நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு, ஆய்வு அறிக்கை பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட துறையில் தமிழ் நாடு தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டு உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. பார்வையில் காணும் கடிதத்தில், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சில நேர்வுகளில் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் பிறந்த தேதி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அம்மாதிரி நிகழ்வுகள் நிகழாவண்ணம் தடுக்கும் பொருட்டும், அரசு ஊழியர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் உரிய படிவத்திலும் அத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் இணைக்கப்படுவதும் குறித்தும் தக்க அறிவுரைகள், அனைத்து துறைகளுக்கும் வழங்குமாறு கோரியுள்ளார்.

3. இது குறித்து கீழ் கண்ட நடைமுறைகளை பின்பற்ற அறிவுரைகள் வழங்கப்படுகிறது:-

"(I) மனுதாரர் பிறந்த தேதி மாற்றம் குறித்து மனுதாரர் பிறந்த இடம் தொடர்புடைய கோட்டாட்சித் தலைவரின் விசாரணை அறிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்து மனுதாரர் கோரும் பிறந்த தேதியினை மாற்றலாம்

என ஆய்வு அறிக்கையை வருவாய்த் துறை ஆணையர் அவர்கள் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட நியமன அலுவலர், தனியர் தமிழ்நாடு தேர்வாணையத்தால் பணி நியமனம் செய்யப்பட்டவராயின் தனியர் பிறந்த தேதி மாற்றத்தால் அவர் தெரிவு செய்யப்பட்ட பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்குள் உள்ளவரா? பிறந்த தேதி மாற்றத்தால் அவரது தெரிவு பாதிக்கப்படுமா? இல்லையெனில், அவரது முதுநிலை மாற்றம் ஏற்படுமா? ஏற்படாதா? என்ற விவரங்களுடன் தமிழ் நாடு தேர்வாணையத்திற்குத் தெரிவித்து தேர்வாணையத்தின் கருத்தினைப் பெற்ற பின்னர் தான் பிறந்த தேதி மாற்றம் அனுமதிக்கப்படுமாயின் அதனை அலகு அலுவலர் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

(2) மேலும் மனுதாரர் தனது கோரிக்கை மனுவினை உரிய அலுவலகத் தலைவர் மூலமாக பின்வருமாறு முறையாக சமர்ப்பிக்க வேண்டும்.

(i) மனுதாரர் அசல் மனு மற்றும் படிவ மனு பணியில் சேர்ந்து 5 ஆண்டுகளுக்குள் சமர்பித்திருக்க வேண்டும். மேற்காணும் மனுக்களில் உரிய அலுவலக முத்திரை தெளிவாக இடப்பட்டிருக்க வேண்டும். பணியில் சேர்ந்த தேதி விவரம் குறிப்பிட வேண்டும்.

(ii) மனுதாரர் மற்றும் உடன் பிறந்தோரின் விவரம் (பிறப்பு இறப்பு வரிசை கிரமப்படி)

(iii) அசல் பிறப்பு மற்றும் கல்விச்சான்று நகலுடன் மனுதாரர் முதன் முதலில் முதல் வகுப்பில் சேர்ந்த தேதிக்கான ஆதாரம் 2வது வகுப்பு முதல் 9வது வகுப்பு வரை, மற்றும் 10ம் வகுப்பு +2 அல்லது எஸ்எஸ்எல்சி. அசல் சான்று.

(iv) பிறந்த ஊரைச் சார்ந்த ரத்த தொடர்பில்லாத இரு நபர்களின் வாக்குமூலங்கள் (மேற்படி நபர்களின் வயது குறிப்புடன்).

(v) மனுதாரரின் கல்விச் சான்றில் குறிப்பிடப்பட்ட தேதியில் மனுதாரரின் பெற்றோருக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்பதற்கு ஆதாரம் (அந்த தேதியின் பிறப்பு இறப்புப் பதிவேட்டின் நகல்)

(vi) தனியரின் பணிப்பதிவேடு

(vii) உரிய அலுவலகத் தலைவரின் குறிப்புரை.

4. மேற்கண்ட நடைமுறைகளை தவறாது பின்பற்றுமாறு அனைத்து செயலக துறைகள் மற்றும் அனைத்து துறை தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

23/6/04

அரசு செயலாளருக்காக.

23/6

நகல்—
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, சென்னை—9
(அனைத்துப் பணிப்பிரிவுகள்)